# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No. 2 /2024**

**Deposition of Witness :PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரிகா | Taluk | |
| Husband Name | அருள் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 29.01.2026.** | | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் குடியிருந்து வரும் வாங்கலில் இருக்கும் முகவரியில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் 2 வருடமாக குடியிருந்து வருகிறேன். 2 வருடமாக எந்த நிறுவனத்தில் வேலைக்கு செல்கிறேன் என்றால் நான் வேலைக்கு செல்லவில்லை. திருமணம் ஆன தேதியில் இருந்து 1ம் எதிர்மனுதாரரை பிரிந்து சென்றது வரை நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை. காதலித்து வந்த காலகட்டத்தில் 1ம் எதிர்மனுதாரர் என்ன படித்திருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் எதிர்மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். காதலித்து வந்த காலகட்டத்தில் என்னுடைய பெற்றோர்கள் எனக்கு சம்மதம் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அதனால் என்னுடைய வீட்டில் இருந்து யாரும் எனது திருமணத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரிதான்.

2) எங்களுக்கு திருமணத்தின்போது 1ம் எதிர்மனுதாரரின் சகோதரி மற்றும் அவரது கணவர் ஈரோட்டில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் சகோதரியை எங்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரரின் சகோதரி பெரிய பள்ளிபாளையத்தில் குடியிருக்கிறார்கள் என்று

Sd/-T.வாஜிதா தபசும்

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் சகோதரி மற்றும் அவரது கணவரின் உதவியுடன் தான் எங்களுக்கு திருமணம் நடந்து பெரிய பள்ளிபாளையத்தில் எங்களை குடியிருக்க வைத்தார்கள் என்று சொன்னால் சரிதான். பெரியபள்ளிபாளையம், நத்தமேடு மற்றும் அய்யம்பாளையம் ஆகிய முகவரிகளில் நானும், 1ம் எதிர்மனுதாரரும் குடியிருந்தபோது 1ம் எதிர்மனுதாரரின் சகோதரி எங்களுடன் இருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் தனியாகத்தான் இருந்தோம். மேற்படி காலகட்டத்தில் 1ம் எதிர்மனுதாரர் குடிபழக்கம் பற்றி 1ம் எதிர்மனுதாரரின் சகோதரியிடம் தெரிவித்து சமாதானம் எதுவும் பேசப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி காலகட்டத்தில் 1ம் எதிர்மனுதாரர் மதுஅருந்திவிட்டு , என்னை அடித்து , துன்புறுத்தியது பற்றி காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடன் அப்போது யாரும் இல்லை. அதனால் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

3) நான் எம்.பி.ஏ படித்த பட்டதாரி என்றும், பிரச்சனை நடந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். எனக்கு யாரும் ஆதரவாக இல்லாததால் புகார் கொடுக்கவில்லை. திருமணம் ஆன நாளிலிருந்து முதல் குழந்தை பிறந்த வரைக்கும் எனது வீட்டார் யாரும் சமாதானமாகவில்லை என்றால் சரிதான். நான் 7 மாதம் கர்ப்பிணியாக இருந்தபோது வீட்டை விட்டு அடித்து துரத்தியதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் , அது குறித்து காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சிகிச்சைக்கு எந்த மருத்துமவமனைக்கு சென்றேன் என்றால் அய்யம்பாளையத்தில் இருந்து வேலூரில் இருந்த தனியார் மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனைக்கு தனியாகத்தான் சென்று சிகிச்சை பெற்று வந்தேனா என்றால் சரிதான். பிரசவ அறைக்கு செல்லும்போதுதான் 1ம் எதிர்மனுதாரர் வந்து குழந்தையின் தந்தை என்று கையொப்பம் இட்டார்.

4) 7 மாதத்தில் 1ம் எதிர்மனுதாரர் வீட்டை விட்டு துரத்தி விட்டபோது அய்யம்பாளையத்தில் இருந்ததாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளபோது எந்த

Sd/-T.வாஜிதா தபசும்
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

முகவரியில் குடியிருந்தீர்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது, முருகன் வீட்டில் குடியிருந்தேன். மேற்படி முருகன் வீட்டில் மனுதாரரையும் 1ம் எதிர்மனுதாரரையும் யார் குடிவைத்தார்கள் என்றால் 1ம் எதிர்மனுதாரரின் மாமா பையன் குடிவைத்தார். பிரமாண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் 1ம் எதிர்மனுதாரரின் என்னை அடித்து துரத்திவிட்டார் என்று சொல்லியுள்ளது , இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அய்யம்பாளையத்தில் இருந்து வேலூர் இருக்கும் மருத்துவமனைக்கு எப்படி சென்றேன் என்றால் பேருந்தில் சென்றேன். வேலூர் பஸ்ஸ்டான்டில் இருந்து சுகம் மருத்துமவனைக்கு எவ்வளவு தூரம் என்றால் பஸ்ஸ்டான்டிற்கு முன்பே நான் இறங்கிவிடுவேன். வேலூரில் இருக்கும் மருத்துவமனைக்கு செல்லும்போது ஒருமுறை கூட வேலூர் பேருந்து நிலையத்திற்குசென்று பஸ் ஏறவோ, இறங்கவோ என்று சொன்னால் சரிதான்.

5) வேலூர் நால்ரோட்டில் இருந்து மருத்துவமனைக்கு எவ்வளவு தூரம் என்றால் சுமார் ஒரு 10 கட்டிடம் தாண்டி இருக்கும். வேலூர் நால்ரோட்டில் இருந்து மருத்துவமனைக்கு எப்படி செல்வேன் என்றால் நடந்தே செல்வேன். மேற்படி மருத்துவமனை எந்த திசையில் இருக்கும் என்றால் பேருந்தில் இருந்து இறங்கி சென்றால் வலது புறம் இருக்கும். நான் 7 வது மாதம் கர்ப்பமாக இருந்தபோது மேற்படி மருத்துவமனையில் எத்தனை முறை சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 4, 5 முறை அபார்ஷன் செய்ததாக கூறியிருந்தேன், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, வேண்டுமென்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் முருகன் வீட்டில் குடியிருந்தபோதுதான் எனக்கு முதல் குழந்தை பிறந்தது என்று சொன்னால் சரிதான். அப்போது நான், 1ம் எதிர்மனுதாரர் மற்றும் எங்களுடைய குழந்தை மட்டும் இருந்தோம் என்றால் சரிதான். என்னுடைய பெற்றோர் யாரும் வரவில்லை.

6) முருகன் வீட்டில் குடியிருந்தபோது வீட்டு வாடகை, குழந்தைக்கான செலவு எல்லாம் யார் செய்தார்கள் என்றால் 1ம் எதிர்மனுதாரர் கொடுப்பார், சில நேரம்

Sd/-T.வாஜிதா தபசும்
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

கொடுக்காமல் பிரச்சனை செய்வார், அப்போது எனது வீட்டில் இருந்து கொடுப்பார்கள். பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய பெற்றோர்கள் அவ்வாறு செலவிற்கு பணம் கொடுத்துள்ளார்கள் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் வேலை செய்யும் இடத்தில் உடன் வேலை பார்க்கும் வசந்தி பற்றி தெரியுமா என்றால் பார்த்திருக்கிறேன். எப்படி தெரியும், எப்போது பார்த்திருக்கிறேன் என்றால் 05.06.2017 ம்தேதியன்று எனது குழந்தை பிறந்தபோது மருத்துவமனைக்கு வந்திருந்தார் . பின்னர் எப்போது நாங்கள் ஷாப்பிங் சென்றாலும், மேற்படி வசந்தி உடன் வருவார். அவர் இல்லாமல் 1ம் எதிர்மனுதாரர் வரமாட்டார்.

7) 2017 ல் இருந்து நான் பிரிந்து செல்லும் வரைக்கும் மேற்படி வசந்தி எல்லா விசேஷங்களுக்கும் வருவார் என்று சொன்னால் சரிதான். 2017 ல் இருந்து நான் பிரிந்து செல்லும் வரைக்கும் 1ம் எதிர்மனுதாரர் இல்லாமல் வசந்தியும், நானும் குழந்தைகளுடன் வெளியே சென்றுள்ளோமா என்றால் இல்லை. மேற்படி வசந்தி பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது, அவரை பற்றி 1ம் எதிர்மனுதாரரிடம் கேட்டால் என்னை அடிப்பார். 2017 ல் இருந்து நான் பிரிந்து செல்லும் வரை எத்தனை முறை கேட்டு அடித்துள்ளார் என்றால் நிறைய தடவை அடித்துள்ளார். என் கண்ணில் 3 முறை அடித்துள்ளார். என் கண்ணில் அடித்து காயம் ஏற்படுத்திய பின்பும் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, என்னுடன் யாரும் இல்லை. அதனால் கொடுக்கவில்லை.

8) என் கண்ணில் காயம்பட்டதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2017 ல் இருந்து வசந்தி வந்து செல்லும் விசயம் பற்றி 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர் மற்றும் சகோதரியிடம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். ஆனால் அவர்கள் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் வசந்திக்கு ஆதரவாக பேசுவார்கள். 2017ம் ஆண்டு குழந்தை பிறந்து 2 மாதம் கழித்து எனது தந்தை எங்களுடன் பேசுவார் என்றால் சரிதான். போனில் மட்டுமே பேசுவார். எனது தந்தை என்னுடன் பேச ஆரம்பித்தபோது 1ம் எதிர்மனுதாரரின் மற்றும் வசந்தியின் பழக்கம் குறித்து சொல்லி காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க அழைத்து

Sd/-T.வாஜிதா தபசும்
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

செல்லவோ அல்லது எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடவோ இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த காலகட்டத்தில் நான் செல்லவில்லை, அதன் பின்பு சென்றிருக்கிறேன்.

9) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரிடம் கோபித்து நான் என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு சென்றேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எந்த தேதி, எந்த வருடம் என்று ஞாபகம் இருக்கிறதா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரை யார் கொடுத்தது என்றால் நான்தான் கொடுத்தேன். மேற்படி புகாரில் பக்கம் 26ல் வசந்தியின் தொலைபேசி எண்ணை புகார் கொடுத்த பின்பு தான் கையில் எழுதினேன் என்றால் இல்லை, புகார் கொடுப்பதற்கு முன்பே எழுதிவிட்டேன். மேற்படி தொலை பேசி எண்ணை எழுதிய எழுத்து என்னுடையதா என்றால் இல்லை. போன் நம்பர் யார் எழுதினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் வக்கிலிடம் விவரம் கொடுத்தேன், யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் 1ம் எதிர்மனுதாரருக்கும், வசந்திக்கும் எந்த தவறான பழக்கமோ இல்லை, அதனால்தான் எனக்கு வசந்தியின் போன் நம்பர் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு நம்பர் தெரியாததால்தான் புகாரில் பின்னிட்டு இடைசெருகலாக எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

10) 1ம் எதிர்மனுதாரருடன் நான் எங்கு சென்றாலும், வசந்தியுடன்தான் வருவார் என்று கூறியுள்ளது வழக்கிற்காக பொய்யாக கூறப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் தவறான பழக்கம் இருந்திருந்தால் அவர்கள் மீது புகார் கொடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. புகார் எதுவும் கொடுக்கவில்லை. 2017 ல் இருந்து தற்போது வரை விவாகரத்து வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் கண்ணில் அடிபட்டபோது சபரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக கூறியுள்ள நிலையில் அப்போதும் தனியாகத்தான் சென்றேனா என்றால் சரிதான். அப்போதும் என்னுடைய தந்தை வரவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் 2021ம் ஆண்டு எனக்கு 11 1/4 பவுனில் செயின் வாங்கி போட்டார் என்றால் இல்லை. மேற்படி நகையை 1ம் எதிர்மனுதாரரின் MAHENDRA MAXI CAP வண்டியை விற்றுதான் வாங்கி கொடுத்தார்

Sd/-T.வாஜிதா தபசும்
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வண்டி வைத்திருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

11) நான் 2023ல் பிரிந்து வந்தபோது எதிர்மனுதாரர் மேற்படி வண்டியை வைத்திருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. 2021, 2022 காலகட்டத்தில் வண்டி இருந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் 1ம் எதிர்மனுதாரர் சொல்லித்தான் தெரியும். நாங்கள் பிரிந்த பின்பு எங்களது குழந்தைகளை 1ம் எதிர்மனுதாரர் வந்து பார்ப்பாரா என்றால் பார்ப்பார், குடிபோதையில் வந்து பார்ப்பார். 2023ல் பிரிந்ததற்கு பின்னிட்டும், 1ம் எதிர்மனுதாரர் எனது குழந்தைகளை பார்க்க வரும்போது குழந்தைகளுக்கு திண்பண்டம் வாங்கி கொண்டு வந்து வீதியில் வந்து பார்த்துவிட்டு செல்வாரா என்றால் குழந்தைகளை பார்க்கவேண்டும் என்று குடிபோதையில் வந்து பிரச்சனை செய்வார்.

12) குழந்தைகளை பார்க்கவேண்டும் என்று பிரச்சனை செய்ததது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் கொடுத்தபுகாரின் பேரில் நடவடிக்கை எதுவும் எடுத்தார்களா என்றால் காவல் நிலையத்தில் அழைத்து எச்சரித்து அனுப்பினார்கள். குழந்தைகளை 1ம் எதிர்மனுதாரர் பார்க்க திண்பண்டங்கள் வாங்கி கொண்டு வருவார் என்றும், நான் தான் பிரச்சனை செய்து பொய்யாக குடிபோதையில் வந்ததாக புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா இறந்த பிறகு எனது தாத்தா வீட்டில்தான் குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் டிரைவர் வேலைக்கு சென்று மாதம் ரூ. 20 ஆயிரம் சம்பாதிக்கிறார் என்று சொல்லியுள்ள நிலையில் அவர் யாரிடம் வேலைக்கு செல்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் சொந்தமாக வண்டி வைத்து சம்பாதித்து வருகிறார். தற்போது தோஸ்து பிளஸ் வண்டி வைத்திருக்கிறார்.

எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–T.வாஜிதா தபசும்
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்